பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**28 11 2025 FRIDAY 7.15 PM**

ஆகாஷவாணி

***தலைப்புச் செய்திகள்***

1. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. உலகின் முன்னணி செமி கண்டெக்டர் நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. கோவா சர்வதேச திரைப்பட விழாவின் நிறைவு நிகழ்ச்சி வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது.

4. **Ditwah** புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று இந்தியா அறிவித்துள்ளது.

5. **19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி, நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் **8** புள்ளி இரண்டு சதவீதம் அளவிற்கு

வளர்ச்சி கண்டுள்ளது ஊக்கம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், மத்திய அரசு செயல்படுத்திவரும் வளர்ச்சிக்கான கொள்கைகள் மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளும், மக்களின் கடின உழைப்பும் இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

உலகின் முன்னணி செமி கண்டெக்டர் நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று மொஹாலியில் செமி கண்டெக்டர் பரிசோதனைக்கூடத்தில் புதிய பிரிவினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த பரிசோதனைக்கூடம் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், இதன் உற்பத்தி அதிகரிக்கும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

உலக அளவில் தேயிலை ஏற்றுமதியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேயிலை உற்பத்தி தொடர்பான தேசிய மாநாட்டில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

நாட்டின் தேயிலை உற்பத்தி வருடத்திற்கு 25 கோடியே 50 லட்சம் டன்னாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் தேயிலைத் துறை முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

தேயிலைத் துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், இந்திய தொழில் கூட்டமைப்பின் வருடாந்திர கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

நாடு முழுவதும் 50 முக்கிய சுற்றுலாத் தளங்கள் சர்வதேச தரத்திற்கு இணையாக மேம்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு நிதி அமைச்சகத்திடம் கோரியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாத்துறையின் பங்கு 10 சதவீத்திற்கும் கூடுதலாக உள்ளது என்றும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<<>>>>>

நாட்டு மக்கள் அனைவருக்கும் தூய்மையான குடிநீர் வழங்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ், ஊரகப்பகுதிகளில் உள்ள 15 கோடி குடியிருப்புக்ள் பயனைடைந்திருப்பதாக கூறினார்.

நீர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் நீர் ஆதாரங்களை மேம்படுத்தவதற்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு

உறுதித்திட்டத்தில் 65 சதவீத நிதியை பயன்படுத்த அனுமதிக்கப்படும் என்றும் திரு சி ஆர் பாட்டீல் கூறினார்.

<<<<<>>>>>

நாடாளுமன்ற பயிற்சித் திட்டத்தில் பங்கேற்றுள்ளவர்களுடன் மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா இன்று கலந்துரையாடினார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், இந்த பயிற்சித் திட்டம் கடந்த பத்தாம் தேதி தொடங்கியதாகவும், அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

12 நாடுகளை சேர்ந்த நாடாளுமன்ற பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் இதில் பங்கேற்றிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நமது ஜனநயாகத்தின் மாண்புகளை அறிந்துகொள்வதில் அவர்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும் திரு ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பட்டியலின்கீழ், இதுவரை 99 புள்ளி நான்கு மூன்று சதவீதம் பேருக்கு விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

நாடு முழுவதும் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் அடுத்த மாதம் 4-ஆம் தேதிவரை இப்பணிகள் நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

**Ditwah** புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், இந்த புயல் காரணமாக இலங்கையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

உடனடி தேவைக்கான நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, உடனடி நிவாரணப் பொருட்கள் இலங்கை சென்றடைந்திருப்பதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், ஆபரேஷன் **Sagar Bandhu** -வின்கீழ், ஐ என் எஸ் விக்ராந்த் மற்றும் ஐ என் எஸ் **Udaygiri** கடற்படை கப்பல்கள் மூலம் இந்த நிவாரணப் பொருட்கள் கொழும்பை சென்றடைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

இனி சர்வதேச திரைப்பட விழா குறித்த செய்திகள்…

***(சவுண்ட் பைட் — Opening Music — 8 செகண்ட்ஸ்)***

கோவா சர்வதேச திரைப்பட விழாவின் நிறைவு நிகழ்ச்சி வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் தற்போது நடைபெற்று வருகிறது.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்த திரைப்பட விழாவில் **81** நாடுகளின் **240** திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

தங்கமயில் உள்ளிட்ட பல்வேறு விருதுகளும் சிறந்த திரைப்படங்களுக்கு வழங்கப்பட உள்ளன.

ஒன்பது நாட்களாக நடைபெற்ற இந்த சர்வதேச திரைப்பட விழா, அனைத்துத்தரப்பினரின் கவனத்தையும் ஈர்த்தது.

***(சவுண்ட் பைட் — Closing Music — 8 செகண்ட்ஸ்)***

<<<<<>>>>>

தில்லியில் காற்று மாசுபடுவது குறித்து நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதம் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இப்பிரச்சினை குறித்து தாய்மார்களுடன் அவர் கலந்துரையாடினார்.

காற்று மாசு காரணமாக உடல் நலம் பாதிக்கப்படுவதாக அவர்கள் இந்த கலந்துரையாடலின்போது தெரிவித்ததாகவும் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் பிறந்த தேதிக்கான சான்றாக ஆதார் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அம்மாநில திட்டத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஆதார் அட்டையில் பிறந்த தேதிக்கான ஆதாரங்கள் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகவரி சான்றாக மட்டுமே ஆதார் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பீகாரில் முதலமைச்சரின் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், பத்து லட்சம் பயனாளிகளுக்கு, ஆயிரம் கோடி ரூபாய் இன்று விடுவிக்கப்பட்டுள்ளது.

பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், பயனாளிகளின் வங்கிக்கணக்குகளுக்கு தொகையை விடுவித்ததாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு **Shravan Kumar,** இதுவரை இந்த திட்டத்தின்கீழ் ஒரு கோடியே **56** லட்சம் பெண்கள் நிதியுதவியை பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

தாய்லாந்தில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை **145** ஆக அதிகரித்துள்ளது.

**Songkhla** மாகாணம் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<<<<<>>>>>

ஆப்கானிஸ்தானில் உடனடி மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக, **73** டன் உயிர்காக்கும் மருந்துகள் அந்நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக மத்திய அரசு கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் மருத்துவ சேவைகளை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்திற்கான வடிவம் நடப்பாண்டுக்குள் இறுதி செய்யப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வர்த்தகத்துறை செயலர் திரு ராஜேஷ் அகர்வால், இதுகுறித்த பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Ayush Mhatre** தலைமையிலான இந்த அணியில் **15** பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, துபாயில் அடுத்த மாதம் **12-**ஆம் தேதி தொடங்கி **21-**ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

-------------

இந்திய மகளிர் குத்துச்சண்டை அணிக்கான தலைமை பயிற்சியாளராக ஸ்வீடனின் **Santiago Nieva** நியமிக்கப்பட்டுள்ளார்.

----------------

இந்தியா — உஸ்பெகிஸ்தான் இடையே **20** வயதுக்கு உட்பட்டோருக்கான இரண்டு மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டி தமிழகத்தில் நடைபெறுகிறது.

மகாபலிபுரத்தில் நாளையும், வரும் செவ்வாய்க்கிழமையும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

--------------

தாய்லாந்தில் நடைபெற்ற **19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மகளிர் **Hand Ball** சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

--------------

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று சிலியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு எட்டரை மணிக்கு தொடங்குகிறது.

--------------

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divyanshi Bhowmick** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ரோமானியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் **15** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-11, 11-5, 12-10, 5-11, 11-7, 11-6** என்ற செட் கணக்கில், கொரியாவின் **Kim Minseo** -ஐ வென்றார்.

**<<<<<END>>>>>**